**தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014**

தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையில் கைசாத்திட்ட 2010 பெப்ரவரி 23 ஆம் திகதிய 797- எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, இலங்கை மத்திய வங்கி தலையாய நிகழ்ச்சித்திட்ட முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்கான ஒட்டுமொத்த பொறுப்பாளராகவும் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2013 சனவரியில் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் பிந்திய இடைக்கால மீளாய்வு பணியகத்தின் சிபாரிசுகளின் பிரகாரம், 2013 மே மாதத்திலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் தலையாய நிகழ்ச்சித்திட்ட முகவராக உள்ளதுடன் செயற்படுகின்ற ‘‘டிவிநெகும’’ நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்பால் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்கு ஒட்டுமொத்த பொறுப்பாக இருக்க வேண்டும். தற்போது, இந்த துறையின் நடவடிக்கைகள் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்தித்திட்டத்தின் நோக்கங்களாவன, காணிகளற்ற சிறு விவசாயிகளிற்கு உதவுதல் குறிப்பாக இளைஞர்களிற்காக (அ) சந்தை தொடர்ச்சி நிலையை விருத்தி செய்து பிணைப்புத் தொகுப்பிற்காக கலந்து கொள்வதற்காக பண்ணையில் அறவிடப்படும் விலையை மேம்படுத்துவதன் மூலம் அவர்களது வருமானத்தை உயர்த்துதல், பண்ணை உற்பத்தி திறனையும் தயாரிக்கப்பட்ட பண்ணை உற்பத்திக்காக பெறுமதியைச் சேர்த்து (ஆ) காணியற்ற இளைஞர்களிற்காக நிதி உதவி மற்றும் பயிற்சியை வழங்குவதன் மூலம் அவர்களது முன்னேற்றத்தைத் திட்டமிட்டு வேலைவாய்ப்பை அதிகரித்தல் என்பனவாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,309.52 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 32.9 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,268.75 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 25 மில்லியன் நிதியளிப்பதற்கு விவசாய அபிவிருத்திக்காக சர்வதேச நிதியத்தால் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்டிருந்தது. மிகுதி நிதிகள் இலங்கை அரசாங்கம், தனியார் கம்பனிகள், உற்பத்தியாளர்கள், சமுதாய அடிப்படை அமைப்புக்கள் மற்றும் பங்குபற்றல் நிதியளிப்பு நிறுவனங்கள் என்பவற்றால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 மார்ச் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களை தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும் 2015 மே 21 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிகழ்ச்சித்திட்டத்தின் பெறுமதி இணைப்பு அபிவிருத்தி மற்றும் சந்தை தொடர்புபட்ட கூறு என்பவற்றின் கீழ் செலவழிக்கப்பட்ட ரூபா 3.39 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் சிவில் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறு கடன்பெறுகைகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 25.71 மில்லியன் தொகையான நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தச் செலவினம் முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 32.36 மில்லியன் தொகையான செலவினத்துடன் உடன்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடி | 25.00 | 3,268.75 | 1,500.00 | 0.19 | 25.71 | 1,348 | 176.15 |
| தனியார் கம்பனிகள் | 5.25 | 686.44 | - | - | - | - | - |
| சீபீஓ கள் | 0.76 | 99.37 | - | - | - | - | - |
| பிஎவ்ஜஎஸ் | 0.39 | 50.99 | - | - | - | - | - |
| உற்பத்தியாளர்கள் | 0.57 | 74.53 | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 0.99 | 129.44 | 71.17 | - | 2.95 | - | 12.96 |
| மொத்தம் | 32.96 | 4,309.52 | 1,571.17 | 0.19 | 28.66 | 1,348 | 189.11 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டத்தில் ரூபா 1,571.17 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 28.6 மில்லியன் அல்லது 1.82 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால், வருடாந்த வேலைத்திட்டமானது முறைப்படி அமுலாக்கப்பட்டிருக்கவில்லை என சான்று உள்ளது.

(ஆ) நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், பெறுமதி இணைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தனியார் கம்பனிகள், உற்பத்தியாளர்கள், சமுதாய அடிப்படை அமைப்புக்கள், பங்குபற்றல் நிதி நிறுவனங்கள் என்பன மொத்த ஒதுக்கீட்டின் 21.14 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 6.97 மில்லியன் பங்களிப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், உரிய தரப்பினரிடமிருந்து முழுமையாக பங்களிப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்ட காலத்தின் 80 சதவீதம் கடந்த பின்னர் நிகழ்ச்சித்திட்டமானது மொத்த ஒதுக்கீட்டில் 4.38 சதவீதத்தை மாத்திரமே பயன்படுத்தியிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

----------------------------------

நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தனியார் துறை மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புகள், சந்தைப்படுத்தல் இணைப்பு அபிவிருத்தி மற்றும் இணைப்புகள், தொழிலாரம்பிப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் ஆட்சேர்ப்புகள் போன்றன இந்த கூறின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட கூறுகளின் கீழ் சகல நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் செய்யப்பட்ட விளக்கங்களின் பிரகாரம், பொருளாதார அமைச்சிற்கு இலங்கை மத்திய வங்கியிலிருந்து அமுலாக்கல் முகவர்களின் அடிக்கடியான மாற்றங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு பாதகமாக பாதித்திருந்தது. இதன் விளைவால், நிகழ்ச்சித்திட்டத்தின் அமைவிடங்களைப் போல நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் மற்றும் விவசாய வியாபார நிபுணர்கள் உள்ளடங்கலாக நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான பதவியணி காலத்திற்கு காலம் மாற்றமடைந்திருந்தது. மேலும், விரிவான செயல்நடவடிக்கை திட்டங்களிற்கு இடையில் நிகழ்ச்சித்திட்டத்தின் முழுக் காலத்தையும் மேவி விரிவான வேலைத்திட்ட அமுலாக்கல் முகவர்களின் மாற்றங்கள் காரணமாக தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் சுமுகமான செயற்பாடுகளை மேலும் பாதித்திருந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிராரம், தனியார் துறை அமைப்புக்களிடமிருந்து பெறப்பட்ட 02 வியாபார பிரேரணைகள் நிகழ்ச்சிதிட்டத்தின் பெறுமதி இணைப்பு அபிவிருத்தி மற்றும் சந்தை தொடர்பு கூறுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் கிளிசொச்சியில் மரக்கறி பயிர்ச்

செய்கைகள், வெலிமட மற்றும் ஊவா மாகாணப் பகுதிகளில் தேனீ வளர்ப்பு அபிவிருத்தி போன்ற பிரேரணைகளை அமுலாக்குவதற்கு ரூபா 3.39 மில்லியன் தொகையை செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், தேனி வளர்ப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2.0 மில்லியன் தொகை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நிகழ்ச்சிதிட்டத்தின் சிறு நிதி நிதியளிப்பு கூறு 2014 சனவரியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 49.6 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான பிரதேச வங்கியால் வழங்கப்பட்ட சிறு நிதி கடன்களின் அறவீடுகள் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு செயற்பாடுகள் அபிவிருத்திக்கு அனுப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியான கணக்கில் விடப்பட்டிரந்தது.

(ஆ) நிகழ்ச்சித்திட்ட வடிவமைப்பு அறிக்கையில் காட்டப்பட்ட மீளாய்வாண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் பாதீடு கூறு வாரியாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட உள்ளபடியான கிரயங்கள் கிரய வகுதிப்படுத்தலின் வேறுபாடு காணமாக பாதிடப்பட்ட தொகைகளுடன் ஒப்பீடுசெய்ய முடியாதிருந்தது.

(இ) தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலான வருடாந்த கணிப்பீட்டுச் சபை நிதிப் பிரமாண இல. 756 இன் பிரகாரம் உரிய சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மையை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.